RESEARCH ARTICLE

Asian Research Association

INDIAN JOURNAL OF TAMIL

DOI: 10.54392/ijot2511

# Karumathur Maasi Festival: Interrelation between Jain Worship and Vedic Narrative

**K. Varusakkani** [a, *]

[a] Department of Folklore and Culture Studies, Madurai Kamaraj University, Madurai-625021, Tamil Nadu, India
*Corresponding author Email: kvkani2016@gmail.com
DOI: https://doi.org/10.54392/ijot2451
Received: 11-09-2024; Revised: 29-12-2024; Accepted: 07-01-2025; Published: 12-01-2025

**Abstract:** Ancestor Worship is a practice that has been followed by most people in rural areas. The rituals performed in village temples are based on the ancestors. In ancient times, new narratives were created around these rituals by understanding the true meanings behind these rituals and avoiding superstitious beliefs we can appreciate the significance of Ancestor Worship. The rituals play a crucial role in cultural traditions However, drastic changes should not be allowed in these rituals. Even if the name of the deity changes, such as the transition from Maasipachchai to Maha Shivaratri, the essence of village customs and rituals remains unchanged This can be understood through the Thiruvizha (temple festival) at Karumathur Moonoosami Temple. Field research has revealed that the Munusamy temples, the family deities of the Piramalai Kallar community living in and around Madurai, are based on ancestor worship rituals.

**Keywords:** Piramalai Kallar, People history, Folk Rituals, Karumaththur Munusamy temple, Jainism, Caste

# கருமாத்தூர் மாசிப்பச்சை திருவிழா: சமணவழிபாட்டு மரபும் வைதீக கதையாடலும்

**கே. வருசக்கனி** [அ *]

[அ] நாட்டுப்புறவியல் மற்றும் பண்பாட்டு ஆய்வுகள் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை - 625024, தமிழ்நாடு, இந்தியா

## முன்னுரை

கருமாத்தூர் என்பது மதுரைக்கு மேற்கே மதுரை - தேனி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள கிராமமாகும். மூணுசாமி என்பது கருமாத்தூரை சுற்றி அமைந்துள்ள கடசாரி நல்லகுரும்பன், பொன்னாங்கன் - ஒச்சாண்டம்மன், கழுவநாதன் - விருமாண்டி -பேச்சி ஆகிய இம்மூன்று தெய்வங்களையும் மூணுசாமி என அழைக்கின்றனர். மதுரை, தேனி, திண்டுக்கல் பகுதிகளில் வாழும் பிரமலைக்கள்ளர் சமூகத்தை சேர்ந்த மக்கள் இந்த தெய்வங்களை குலதெய்வமாக வழிபடுகின்றனர். மாசிப்பச்சை என அழைக்கப்படும் மாசி முதல் அமாவாசையில் இக்கோவில்களில் லட்சக்கணக்கான மக்கள் வழிபாடு செய்கின்றனர். மகா சிவராத்திரி என அழைக்கப்படும் மாசி பச்சையில் இக்கோவில்களில் வைதீக வழிபாடுகளை ஒதுக்கி விட்டு லட்சக்கணக்கான மக்கள் குலதெய்வ வழிபாட்டுச் சடங்குகளை மேற்கொள்வது மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் இந்த கோவில்கள் பிரமலைக்கள்ளர்களின் வாழ்வியலோடு பின்னி பிணைந்துள்ளன. பிரமலைக்கள்ளர் சமூகத்தின் திருமண உறவு முறைகளை தீர்மானிப்பது கருமாத்தூர் மூணுசாமி கோவிலும் பாப்பாபட்டி ஒச்சாண்டம்மன் கோவில்களே ஆகும் (Sundharavandhiyaththevan, 2017).

doi 10.54392/ijot2511

நாட்டுப்புறத் தெய்வங்கள் காலப்போக்கில் மேல்நிலையாக்கம் பெற்று வைதீக தன்மையை அடைகின்றன என்ற சமஸ்கிருதமயமாக்க கோட்பாடுகளுக்கு எதிராக அவைதீக நாட்டுப்புற பண்பாட்டோடு இன்றளவும் விளங்கி கொண்டிருப்பவை கருமாத்தூர் மூணுசாமி கோவில்களாகும். இக்கோவில் வழிபாட்டு சடங்குகளை ஆய்வு செய்வதன் மூலம் இவை வைதீக சாயலற்ற நாட்டுப்புறத் தெய்வங்கள் என்பதை அறிந்து கொள்ளலாம். பொதுவாக மஹா சிவராத்திரி என அழைக்கப்படும் மாசி அமாவாசை கருமாத்தூர் பகுதிகளில் "மாசிப்பச்சை" என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது. கருமாத்தூரை சுற்றி பல்வேறு குலதெய்வ கோவில்கள் வணங்கப்பட்டு வந்தாலும் பெரிய அளவில் கொண்டாடப்படும் தெய்வங்களாக இந்த மூணுசாமி கோவில்கள் உள்ளன.

மூணுசாமி கோவில்கள் பிரமலைக்கள்ளர்களில் சில குறிப்பிட்ட பங்காளிகளுக்கு பாத்தியப்பட்ட கோவில்களாக உள்ளன. இக்கோவில் பராமரிப்பு, திருவிழா ஏற்பாடு செய்தல், வரவு செலவு போன்ற கோவில் நிர்வாக விசயங்களை இந்த பங்காளிகளே செய்து வருகின்றனர். இக்கோவில்களில் அய்யன்பிடிக்கி, பெட்டி பூசாரி, சின்ன பூசாரி என பூசாரிகள் மூன்று வகைகளாக உள்ளனர். அய்யன்பிடிக்கிகள் என்பவர்கள் பொன்னாங்கன் (எ) ஆங்காள அய்யன், கடசாரி நல்ல குரும்ப அய்யன், கழுவ நாத அய்யன் ஆகிய அய்யனார்களுக்கான பூசாரிகளாவர். சின்ன பூசாரி என்பவர் காவல் தெய்வங்களுக்கான பூசாரிகளாவர். பெட்டி பூசாரிகள் என்பது சாமிபெட்டிகளுக்கான பூசாரிகளாவர்.

## மூணுசாமி கோவில்களும் வைதீக கதையாடல்களும்

கருமாத்தூர் மூணுசாமி கோவில்களில் உள்ள தெய்வங்களான விருமாண்டி, கழுவநாதர், மாயாண்டி ஆகிய தெய்வங்களை வைதீகமானது தனது கதையாடல்கள் மூலமாக இந்து மத அமைப்பிற்குள் கொண்டு வர முயற்சி செய்கின்றது. அதன் விளைவாக மாசிப்பச்சை திருவிழா எனும் முன்னோர் வழிபாடானது மகாசிவராத்திரி என்ற பெயரில் மாற்றப்பட்டு வருகின்றது. மேலும் விருமன் என்ற தெய்வம் பிரம்மன் எனவும், கழுவநாதர் என்ற தெய்வம் காசி விஸ்வநாதர் எனவும், மாயன் என்ற தெய்வம் கிருஷ்ணன் எனவும் பெயர் மாற்றப்பட்டு வைதீக தெய்வங்களுடன் இணைக்கப்பட்டு வைதீகமாக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன. ஆனால் மக்கள் இக்கோவில்களில் நிகழ்த்தும் வழிபாட்டுச்சடங்குகள் வைதீகத்திற்கு எதிராக நாட்டார் வழிபாட்டு மரபையே கொண்டுள்ளன.

ஆதிக்கத்தால் பாதிக்கப்பட்ட எல்லா சாதிகளும் தனது பண்பாட்டு மரபில் ஆதிக்க எதிர்ப்பை உள்ளூர கொண்டிருக்கும். அந்த வகையில் பிரமலைக்கள்ளர்களும் ஆதிக்க எதிர்ப்பை தன் வழிபாட்டு மரபில் கொண்டிருக்கின்றனர். இன்றைய சூழலில் அரசியலில் அதிகாரம் பொருந்திய சாதியாக இவர்கள் இருந்தாலும் கூட இவர்களின் பண்பாட்டு இயக்கம் சாதியாக இல்லாமல் இனக்குழுவாக (Clan) உள்ளது. வழிபாட்டு மரபில் பட்டியல் இன மக்களுடன் பூஜை உரிமையை பகிர்ந்து கொள்ளுகின்றனர். ஆ.கொக்குளம் ஆலயம் தொடர்பான சிக்கலின் போது தாங்கள் இந்துக்கள் இல்லை, குலதெய்வ வழிபாட்டினர் என்ற கோரிக்கை இம்மக்கள் மத்தியில் எழுந்தது(தி இந்து, 03/09/2021).

## வழிபாட்டு சடங்குகள்

மனித சமூகம் தனது தொடக்ககால வழிபாட்டு முறைகளாக இயற்கை வழிபாடு, போலிஉரு வழிபாடு (Fetishism), முன்னோர் வழிபாடு (Ancestor Worship) போன்ற வழிபாடுகளை மேற்கொண்டு வந்தது. இந்த வழிபாடுகள் நன்றிக்கடனாகவும் பயத்தினாலும் நிகழ்த்தப்பட்டன (Bakthavatchala Bharathi, 2003). மனித வரலாற்றில் தொன்மையானவை சடங்குகளே ஆகும் (Frazer, 1976). சில சடங்குகளின் செல்வாக்கையொட்டி பிற்காலத்தில் கதைகள் உருவாக்கப்படுகின்றன. நாளடைவில் அந்த கதையையே குறிப்பிட்ட விழாவுக்கான காரணங்கள் என கருதுகின்றனர். முன்னோர்களின் ஆவி பிற ஆவிகளை விட உயர்வாக மதிக்கப்பட்டு தெய்வீக ஆவி, புனித ஆவி என அழைக்கப்படுகின்றன (Sivasubramaniyam, 2015). கருமாத்தூர் மூணுசாமி கோவில்களில் சாமிபெட்டி

தூக்குதல், பச்சை போடுதல், எண்ணெய் ஊற்றுதல், மொட்டையடித்தல், கிடாய் வெட்டுதல் ஆகிய வழிபாட்டு சடங்குகள் நடைபெறுகின்றன.

இந்த வழிபாட்டு சடங்குகள் முன்னோர் வழிபாட்டை குறிப்பதாக அமைகின்றன. அமாவாசை என்பது பண்பாட்டு மரபில் இறப்பின் குறியீடாக கருதப்படுகிறது. அமாவாசை மற்றும் பௌர்ணமி எனபது முன்னோர் வழிபாட்டில் முக்கியமான தினங்களாகும். அன்றைய தினங்களில் முன்னோர் வழிபாட்டுச் சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன.

## கழுவநாதரும் கழுமரமும்

மூணுசாமிகோவில்களின் தோற்றத்தொன்மக் கதைகள் மக்களிடையே கிடைக்கப்பெறவில்லை. மாறாக மூணுசாமிகளின் காவல் தெய்வங்களான ஒச்சாண்டம்மன், மாயன், விருமாண்டி, பேய்ச்சி போன்றோரின் தொன்மக்கதைகள் மக்களிடையே வழங்கப்பட்டு வருகின்றன. மூணுசாமிகளில் தலைமை தெய்வமாக கருதப்படும் கழுவநாதர் என்பது சமண அடையாளத்தோடு தொடர்புடையதாகும். திருவிழாவன்று விருமாண்டி கோவில் முன்பாக கழுமரம் அமைக்கப்படுகின்றது. கழுவநாதர் கோவில் என்பது கழுமரத்தில் ஏற்றிக் கொள்ளப்பட்ட சமணத்துறவியின் நினைவிடம் எனவும் கருதப்பட வாய்ப்புள்ளது. தொடக்க காலத்தில் இக்கோவில்களில் பீடங்கள் மட்டுமே இருந்ததாகவும் பிற்காலத்தில் கோவில்கள் கட்டப்பட்டதாகவும் மக்கள் கூறுகின்றனர். இன்றளவும் கழுவநாதர் தெய்வத்திற்கு சிலை அமைக்கப்படவில்லை. பீடம் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது. இது முன்னோர் வழிபாட்டின் அடையாளமான நினைவு பீடம் அல்லது சமாதியை குறிக்கிறது. மேலும் இப்பகுதி மக்களிடையே கழுவன், கழுவாயி, கழுவத்தேவன் ஆகிய கழுமரம் தொடர்பான பெயர்கள் பரவலாக வழங்கப்பட்டு வருகின்றன.

மூணுசாமி கோவில்களில் மூத்த தெய்வமாக உள்ளது கழுவநாதர் என்ற தெய்வமாகும். கழு, கழுவன், கழுவ நாதர் என்ற பெயர் சமணத்தோடு நெருங்கிய தொடர்புடையதாகும். இந்த மூணுசாமிகள் சைவ படையலை கொண்டவை என்றும், இந்த மூன்று ஆண்டிகள் (மூணுசாமிகள்) கடந்து வந்த ஊர் மூணாண்டிபட்டி (மூன்று+ஆண்டி+பட்டி) என மக்கள் மத்தியில் துண்டுதுண்டு கதைகளாக வழங்கப்பட்டு வருகின்றன. ஆண்டிகள் என்பது துறவறம் மேற்கொண்ட பெரியவர்களை, துறவிகளை குறிப்பதாகும். மூன்று சமணத்துறவிகள் தான் மூணுசாமிகள் என்ற பெயரில் வணங்கப்படுகின்றனர் என்பதை சடங்குகள் மூலம் அறிந்து கொள்ளலாம். கழுவநாதர் கோவிலின் காவல் தெய்வங்களான விருமன் - பேய்ச்சி கோவில்களின் முன்பாக திருவிழாவன்று பித்தளையால் ஆன கழுமரம் நடப்படுகின்றது.

விருமன் (ஆண்டி), தவசி (ஆண்டி), மாயன் (ஆண்டி) போன்ற பரிவாரத் தெய்வங்களின் பெயர்கள் மூத்தோர்கள், பெரியோர்கள், துறவிகள் என்ற அர்த்தத்தை கொண்டிருப்பது கவனத்திற்குரியது. விருமாண்டி - பேச்சி - பேக்காமன், ஒச்சாண்டம்மன் - ஆச்சிக்கிழவி குறித்து மக்களிடையே வழங்கப்பட்டு வரும் தோற்றத்தொன்ம கதைகள் பிற்காலத்தில் மூணுசாமிகளோடு இணைக்கப்பட்டவை என அனுமானிக்க முடிகிறது. மூன்று துறவிகளான மூணுசாமிகளோடு பிரமலைக்கள்ளர்களின் முன்னோர்களான விருமாண்டி - பேச்சி - பேக்காமன், ஒச்சாண்டம்மன் - ஆச்சிக்கிழவி போன்றோர்கள் பரிவார தெய்வங்களாக இணைக்கப்பட்டிருக்கலாம் என்பது இத்தெய்வங்களின் தோற்றத்தொன்மக் கதைகளின் மூலம் அறிய முடிகிறது.

## சாமிபெட்டி தூக்குதல்

மாசிப்பச்சை திருவிழாவில் மற்ற பகுதிகளில் இல்லாத முக்கியமான சடங்கு மூணுசாமி, ஒச்சாண்டம்மன் கோவில்களில் நடைபெறுகிறது. அது யாதெனில் பெட்டி தூக்குதல் சடங்காகும். இந்த பெட்டி தூக்குதல் சடங்கானது கோவில் மீது உரிமை கொண்ட பங்காளிகள் பெட்டி கொண்டு வருவதாகும். கோவில் மீது உரிமை கொண்ட பங்காளிகள் வசிக்கும் சாமிவீட்டில் இருந்து கோவிலுக்கு சாமிபெட்டிகள் ஊர்வலமாக கொண்டு செல்லப்படும். மாசிபச்சை சிவராத்திரியன்று மதிய வேளையில் சாமிபெட்டி சுத்தம் செய்யப்பட்டு பூக்களால் அலங்கரிக்கப்படுகிறது.

பெட்டியினுள் சாமிக்கு உரிய நகைகள், உடைகள் போன்றவை வைக்கப்பட்டிருக்கும். அலங்கரிக்கப்பட்ட சாமிபெட்டியினை பெட்டிபூசாரியின் தலையில் சுமந்தவாறு சாமிவீட்டில் இருந்து ஊர்வலமாக ஊரைச்சுற்றி வந்து கோவிலுக்கு கொண்டு செல்லப்படும். கோவிலுக்கு ஊர்வலமாக செல்லும் போது பட்டாசுகள் வெடித்து ஒற்றைக்கொட்டு, கட்டைக்குழல் போன்ற இசைகருவிகள் இசைக்கப்பட சாமிபெட்டி ஊர்வலமாக கோவிலுக்கு கொண்டு செல்லப்படும்.

பெட்டி செல்லும்போது நான்காக அறுக்கப்பட்ட எலுமிச்சம்பழத்தை குங்குமத்தில் தோய்த்து பெட்டியின் முன்பாக வீசிபடியே செல்கின்றனர். சாமிபெட்டியின் முன்பாக நீர் நிறைக்கப்பட்டு மரிக்கொழுந்து மாலையால் சுற்றப்பட்ட மூன்று கும்பங்கள் கொண்டு செல்லப்படுகின்றன. கோவிலில் பெட்டி இறக்கி வைக்கப்படும் போது கோவிலை வலமிருந்து இடதுபுறமாக மூன்று முறை சுற்றி கொண்டு வரப்பட்டு இறுதியில் கோவிலுள் இறக்கி வைக்கப்படும். இந்த நிகழ்வானது இறந்தவரை குழியினுள் அடக்கம் செய்யும் போது நிகழ்த்தப்படும் இறப்பு சடங்கினை போல நிகழ்கிறது. இறந்த அனைவரும் கடவுளாக வழிபடப்படுவதில்லை. பெரியவர்கள், துறவிகள், வழிகாட்டிகள், கொலையுண்டவர்கள் போன்றோரே நன்றிக்கடன், பயம் போன்றவற்றின் காரணமாக வழிபடப்படுவர். இந்த சாமிபெட்டி தூக்குதல் நிகழ்வில் நடைபெறும் சடங்குகள் இறந்தவர்களுக்காக நடைபெறும் இறுதிச்சடங்குகளை போல் அமைந்துள்ளது.

இறந்த வீரர்கள், பெரியவர்கள் நினைவாக அவர்கள் பயன்படுத்திய பொருட்களை பெட்டியினுள் பாதுகாத்து அவர்களின் நினைவு நாளில் அவர்கள் அடக்கம் செய்யப்பட்டதன் அடையாளமாக விளங்கும் நினைவு பீடத்தின் மீது வைத்து வணங்கப்பட்டு வந்ததன் குறியீடாக மாசிப்பச்சை நாளில் குலதெய்வ வழிபாட்டில் பெட்டி தூக்குதல் சடங்கு நிகழ்த்தப்படுகிறது.

## எண்ணெய் ஊற்றுதல் நிகழ்வு

பொன்னாங்கன் - ஒச்சாண்டம்மன் கோவில், கழுவநாதர் கோவில், விருமாண்டி - பேச்சி கோவில்களில் கோவில் முன்பாக உயரமான கல்லால் ஆன தீபத்தூண்கள் நடப்பட்டுள்ளன. மாசிபச்சை திருவிழாவின் இரண்டாம் நாளன்று கோவிலுக்கு வரும் பக்தர்கள் தீபத்தூண்களில் எண்ணெய் ஊற்றி அதன்பின்பே வழிபடச் செல்கின்றனர். இந்த தீபத்தூண்கள் சமணக்கழுவேற்றம் நிகழ்ந்த கழுமரத்தின் குறியீடா இருக்கலாம். ஏனெனில் சமணக்குகைகள், தீர்த்தங்கரர்களின் சிற்பங்கள், சமணப்படுக்கைகள் காணப்படுகின்ற அரிட்டாபட்டி, பெருமாள்மலை, கீழக்குயில்குடி சமணர்மலை, திருமலை போன்ற பல்வேறு இடங்களில் இது போன்ற உயரமான தீபத்தூண்கள் நடப்பட்டுள்ளன.

இந்த கோவில்களில் உள்ள தீபத்தூண்கள் இது போன்ற முன்னோர் வழிபாட்டின் எச்சமாக உள்ள ஈம விளக்கேற்றுதல் என்பதன் அடையாளமாக கருதலாம் (Stalin Rajangam, 2022). சமண சமயம் நிறுவனமயமாக்கப்பட்ட போது இது போன்ற முன்னோர் வழிபாட்டு கூறுகளை உள்வாங்கியிருக்கலாம் என்று கருத இடமுண்டு மாசிப்பச்சை எனும் குலதெய்வ வழிபாட்டில் இந்த தீபத்தூணில் எண்ணெய் ஊற்றுதல் நிகழ்வானது இறப்புச் சடங்கோடு தொடர்புடையதாக கருதலாம்.

## பச்சை போடுதல்

பச்சை போடுதல் என்பது மாசிப்பச்சை திருவிழாவில் முதல் நாளன்று (சிவராத்திரி) நடைபெறும் சடங்கு ஆகும். நள்ளிரவு ஒரு மணி அளவில் உச்சி வேளையில் மொச்சைப்பயிறை அவித்து அதனுடன் பச்சரிசி மாவினை கலந்து வாழையிலையில் தேங்காய், வாழைப்பழம் வைத்து பரிவார தெய்வங்களுக்கு படையலிடுகின்றனர். இந்த சடங்கு "பச்சை போடுதல்" என அழைக்கப்படுகிறது. இந்த சடங்குகள் முன்னோர் நினைவு நாளில் படைக்கப்படும் படையலாகும்.

மாசிப்பச்சை திருவிழாவின் நிகழ்வுகளான இரவு முழுவதும் தூங்காமல் இருத்தல், எண்ணெய் விளக்கு ஏற்றுதல், மொச்சைப் பயறு அவித்து படையலிடுதல், உப்பில்லாத உணவு சமைத்தல் போன்றவை இறப்பு வீடுகளில் நடைபெறும் சடங்குகளாகும். பொன்னாங்கன்

தெய்வத்திற்கும் மற்ற பரிவார தெய்வங்களுக்கும் சாமிபெட்டிக்கும் பூஜை செய்யும் போதும் படையலிடும் போதும் பூசாரி தனது மூக்கையும் வாயையும் வாழையிலையால் மூடியபடி பூஜை செய்வர். இது சமணர் மரபை பிரதிபலிப்பதை போல அமைந்திருக்கின்றது.

## சாமிபெட்டியும் இறுதிச்சடங்கு கூறுகளும்

மாசிப்பச்சை திருவிழாவின் இரண்டாம் நாளன்று கோழி பலிகொடுக்கப்பட்டு உப்பில்லாமல் சமைக்கப்பட்டு பரிவார தெய்வங்களுக்கு படையலிடுகின்றனர். அதன் பின்பு அந்த அசைவ சாப்பாடு பக்தர்களுக்கு அன்னதானமாக வழங்கப்படுகிறது. இந்த நிகழ்வு இறப்பு வீடுகளில் உருமா கட்டுதல், அல்லது கருமாதியன்று நடைபெறும் காய்ச்சி ஊற்றுதல் எனும் கறி சமைத்து உண்ணுதல் சடங்கின் நடைமுறையை ஒத்ததாக அமைகிறது.

மாசிப்பச்சை திருவிழாவின் இறுதிநாளான மூன்றாம் நாளன்று கோவிலில் இருந்து சாமிபெட்டியானது ஊருக்குள் உள்ள சாமிவீட்டிற்கு கொண்டு செல்லப்படுகின்றது. சாமிபெட்டி ஊர்வலமாக ஊருக்குள் கொண்டு செல்லப்படும்போது ஊர்மக்கள் பெட்டி சென்ற பின்பு தங்களது வீட்டு வாசல்களில் நீர் ஊற்றுகின்றனர். இந்த நிகழ்வானது இறப்பு சடங்குகளின் போது கடைப்பிடிக்கப்படும் நிகழ்வுகளில் ஒன்றாகும்.

மாசிப்பச்சை நாளானது மகா சிவராத்திரி என்ற பெயரில் தற்போது கொண்டாடப்பட்டு வருகின்றது. மூணுசாமிகளின் தலைமை தெய்வமான கழுவநாதர் தற்போது காசி நாதர் என்ற பெயரிலும் விருமன் பிரம்மன் என்ற பெயரிலும் மாயாண்டி மாயன் அல்லது திருமால் என்ற பெயரிலும் கதையாடல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மூணுசாமிகள் என்பது சிவன் பிரம்மன், திருமால் ஆகியோரின் அவதாரம் எனவும் புதிய கதைகள் கட்டப்பட்டுள்ளன. ஆனால் களஆய்வின் மூலம் இவற்றை குலதெய்வமாக வணங்கக்கூடிய பிரமலைக்கள்ளர்கள் இன்றளவும் முன்னோர் வழிப்பாட்டுச்சடங்கு முறைகளையே பின்பற்றி வருகின்றனர் என்பதை அறிந்து கொள்ளலாம்.

## முடிவுரை

பெரும்பாலான திருவிழாக்களில் நிகழ்த்தப்படும் சடங்குகள் முன்னோர் வழிபாட்டினை அடிப்படையாக கொண்டவையாகும். காலப்போக்கில் அவற்றின் மீது புதிய தொன்மக்கதைகள் புனையப்பட்டாலும் ஏதேனும் ஒரு வகையில் முன்னோர் வழிபாட்டின் கூறுகள் புழக்கத்திலேயே இருக்கும். சில சடங்குகளின் செல்வாக்கையொட்டி பிற்காலத்தில் புதிய கதைகள் உருவாக்கப்படுகின்றன. காலப்போக்கில் அந்த புதிய கதையே குறிப்பிட்ட திருவிழாவுக்கான காரணமாக கருதப்படுகின்றன. ஆனாலும் அந்த வழிபாட்டின் மூல வடிவத்தை சடங்குகளே கொண்டிருக்கும். புழக்கத்தில் இருக்கும் கதைகளுக்கும் நிகழ்த்தப்படும் சடங்குகளுக்குமான குறியீடுகளின் அர்த்தத்தை கண்டறிவதன் மூலம் அதன் மூல வடிவத்தை கண்டடையலாம். இவற்றை ஆய்வு செய்வதன் மூலம் இச்சடங்குகளின் தொடக்க கால நோக்கம், சமூக வளர்ச்சி போக்கில் அவற்றில் நிகழ்ந்த மாற்றங்கள் மற்றும் பண்பாட்டு பரிணாமங்களை அறிந்து கொள்ளலாம்.

## References

Bakthavatchala Bharathi, (2003) Panpattu Manudaviyal, Adayalam Pathipagam, Puthanatham, India

Frazer, G.J. (1976), The Golden Bough – A Study in Magic and Religion. The Macmillan Press Ltd., London.

Sivasubramaniyam, A. (2015) Manthiramum Sadangukalum, Kalachuvadu, Nagerkovil, India

Stalin Rajangam, (2022) Panpattin Palakani, Parisal Puthaga Nilayam, Chennai, India

Sundharavandhiyaththevan, R. (2017) Piramalai Kallar Vazhvum Varalarum, santhiya pathipagam, Chennai, India

## Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2025. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

K. Varusakkani, Karumathur Maasi Festival: Interrelation between Jain Worship and Vedic Narrative, Indian Journal of Tamil, 6(1), (2024) 1-6. https://doi.org/10.54392/ijot2511